# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,237 — 1922 ம் ஸ்ரீ தைமீ 13 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

1898 ம் ஆண்டின் லோக்கல்போட் சட்டம்.

1914 ம் ஆண்டின் 29 ம் சட்டத்தின் 4 ம் பிரிவினுற் திருத்தப்பெற்ற 1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 56 ம் பிரிவின் (20A) ன் பெலப்பாக மட்டைக்களப்பு "லோக்கல் போட்" ஆல் நியோகிக்கப்பட்டு உத்தம தேசாதிபதியவர்களால் அதிகார மந்திரசபையாரின் யோசனையோடு உறுதியாக்கப்பட்ட உபவிதிகள் பின்வருமாறு :—

உத்தமனுர் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்.
கொழும்பு 1922 ம் ஸ்ரீ தைமீ 6 ந் திகதி.

கிறேய்ம் தொம்ஸன்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

1. ஜலம்பிடிக்கும் எந்தக் குழிகளுக்குள்ளாவது அழுக்குத்தண்ணீர் விழுந்து சேர்ந்திருந்தால் அந்தக்குழியிலிருக்கும் வளவின் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் குடியிருப்பவருக்கு அவ்வழுக்குத் தண்ணீரைச் சுகாதார சங்கத்தார் அன்று தொடக்கம் நாள்தோறும் அள்ளுவிப்பாரென்று அச்சுகாதார அக்கிராசனர் அறிவிப்பது நீதியாயிருக்கும் அதுதொடக்கம் சங்கத்தார் நியமித்தபடி அழுக்குத் தண்ணீரை அள்ளுவிக்கிறதற்கு நியாயமான பணம் அந்தச்சொந்தக்காரன் அல்லது குடியிருப்போன் கொடுக்கவேண்டும். அப்பணம் மட்டக்களப்பு சுகாதார சங்கத்தால் உண்டாக்கப்பட்டு 1915 ம் ஆண்டு மாசிமீ 19 ந் திகதியையுடைய 6,690 ம் இலக்க அரசாட்சி கசெற் பத்திரிகையில் பிரசித்தம்பண்ணப்பட்ட பிரமாணத்தின்படி கக்கூசுக்காக அறவிடும் விதம் அறவிடப்படும்.

2. அழுக்குத் தண்ணீர் விழுந்து சேரும் எந்தக் குழிகளிருக்கும் நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதில் குடியிருப்போன் 1 ம் பிரமாணத்திற் காட்டியபடி சங்கத்தலைவர் அறிவிக்காமல் விட்டால் அதனுல் தீங்கு வாராதபடி செய்வதற்கு சங்கத்தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட இடத்துக்கு அவ்வழுக்குத் தண்ணீரை நாள்தோறும் கொண்டுபோய் ஊற்றுவிக்க வேண்டிய பொறுப்பாளியாவார்கள். மேலேசொல்லியபடி அப்படி ஊற்றுவிக்காமல்விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது குடியிருப்பவனும் குற்றவாளியாவார்கள்.

---

1898 ம் ஆண்டு 13 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 56 (5) ம், (21) ம் பிரிவுகளின்கீழ் கம்பளைச் சௌக்கியசங்கத்தாரால் செய்யப்பட்டு அதிகார நிருவாக மந்திரச் சபையாரின் புத்திமதியைக்கொண்டு அதியுத்தம தேசாதிபதியவர்கள் அங்கீகரித்த பின்வருந் துணைப்பிரமாணங்கள் சகலரு மறியும்படி பிரசுரஞ்செய்யப்படுகின்றன.

அதி உத்தமனுர் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்
கொழும்பு, 1922 ம் ஸ்ரீ தைமீ 10 ந் உ.

கிறேய்ம் தொம்ஸன்,
இராசாங்க லிகிதர்.

மேற்கூறிய துணைப்பிரமாணங்கள்.

இறைச்சிக்கடைகள்.

1. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் நல்லாய்க் காற்றும் வெளிச்சமும் உள்ளதாக இருக்கவேண்டும். சங்கத்தலைவர் வேண்டுமாறு அதின் சுவர்கள் சுண்ணும்பு பூசி வெள்ளையடித்திருக்கவும், நிலம் சீமெந்து பூசியும், கான் கட்டப்பட்டுள்ளதாகவும் நல்லாய்ப் போக்குவரவுள்ளதாகவு மிருக்கவேண்டும்.

2. இறைச்சி வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் மிகவுஞ் சுத்தமாகவிருக்கவேண்டும்.

3. இறைச்சிக்கடையில் இருக்கும் ஒவ்வொரு மேசையும் ஷிங் தகரத்தால் அல்லது சங்கத்தலைவர் சம்மதப்பட்ட வேறு தண்ணீர் ஊறி இறங்கவிடாத பொருளால் மூடப்பட்டதாயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட மேசையும் வெட்டுப் பலகையும் மற்றுஞ் சாமான்களும் மிகவுஞ் சுத்தமாய் வைத்திருத்தல்வேண்டும். பாவித்தவுடன் இவைகளைத் தண்ணீரால் கழுவி கடுமையானவும் சுத்தமான பிறஷால் துடைக்கவேண்டும். இறைச்சி தூக்கும் எல்லாக் கொளுவிகளும் மினுக்கப்பட்டு கறளில்லாமல் வைத்திருத்தல்வேண்டும்.

4. கழிவும் விற்கக்கூடாத பதார்த்தங்களையும் உடனே அகற்றப்படாவிட்டால் இலையான்கள் போகக்கூடாத துவாரங்கள் உள்ள ஷிங் மூடியினால் மூடப்பட்டவும் ஷிங் தகரத்தால் உள் பரவப்பெற்ற ஓர் பெட்டியில் வைத்திருக்க வேண்டும்.

5. இறைச்சிச்கடைக்குக் கிட்டவுள்ள எல்லா அழுக்கும் ஊத்தையும் ஒரு நாளைக்கு ஒரு முறையாகுதல் அகற்றப்படவேண்டும். கான்கள் நல்லாய்த் தண்ணீர் அடித்துக் கழுவப்பட்டு மிருக்கவேண்டும்.

6. இறைச்சிக்கடைக்காரனறிய தொற்றுநோயால் வருத்தப்படும் அல்லது முந்தி வருத்தப்பட்ட ஆள் அல்லது அப்படி வருத்தப்படுகிறவனுக்கு துணையாயிருந்தவன் அப்படி இறைச்சிக்கடையில் வேலையாயும் அல்லது கடைக்குப் பொறுப்பாயும் இருக்கப்படாது.

7. கழிவுச்சரக்கு வைக்கிறதற்கு சங்கத்தலைவர் அங்கீகரித்த பருப்பமுள்ளவும் மூடியுள்ளவும் எடுக்கக்கூடியவும் லோகத்தால் அல்லது வேறுபொருளால் செய்யப்பட்ட பெட்டியை வைத்திருக்கவேண்டும்.

8. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் அதன் வியாபாரநடவடிக்கைகளும் எல்லா நியாயமான நேரங்களிலும் திறந்தாயும் நடைபெறுகிறதாயு மிருக்கவேண்டும். அது சங்கத்தலைவரால் அல்லது அவர் அதிகாரம்பெற்ற இன்னொருவரால் சோதனைக்கு உடன்பட்டதா யிருக்கவேண்டும்.

9. அடியும் நாலுபக்கங்களும் ஷிங் தகரத்தால் உள்பரவப்பட்டுள்ள ஒரு மூடிய வண்டியில் இறைச்சியை அடிக்கிற வீட்டிலிருந்து விற்கும் கடைக்குக் கொண்டுவரவேண்டும். இந்த வண்டில் இறைச்சி கொண்டுபோக மாத்திரம் பாவிக்கப்படல் வேண்டும். அதை மிகவும் துப்பரவாய் வைத்திருத்தல் வேண்டும்.

10. தோல்களை இறைச்சிக்கடைக்குள் சேகரம்பண்ணக் கூடாது.

11. இறைச்சிவிற்றற்கு தேவையான சாமான்களொழிய தட்டுமுட்டுச்சாமானாவது அல்லது வேறுசாமானாவது ஒரு இறைச்சிக்கடைக்குள் வைத்திருக்கப்படாது.

12. ஒரு இறைச்சிக்கடையையும் குடியிருத்தற்குப் பாவிக்கப்படாது.

13. என்ன நியாயத்தைக்கொண்டாவது இறைச்சிக்கடையில் மிருகசாதி எதையும் வைத்திருக்கப்படாது.

14. இறைச்சி தூக்கும் கொழுவிகளைத் தாங்கும் கம்புகள் கட்டப்பட்டுத் தூங்கும் புரியும் இறைச்சி நிறுக்கும் தராசுகளும் லோகத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

15. ஒவ்வொரு இறைச்சிக்கடையிலும் தெரியக்கூடிய இடத்தில் இத்துணைப்பிரமாணங்களை பிறேம்போட்டுத் தூக்கியிருக்கவேண்டும்.

1898 ம் ஆண்டு 13 ம் இலக்க 56 (5) ம் பிரிவின் கீழ்.

மீன்கடைகள்.

1. ஒவ்வொரு மீன்கடையும் நல்ல வெளிச்சமுள்ளதாயும் காற்று போக்குவரவு செய்யக்கூடியதா யிருக்கவேண்டும். சங்கத்தலைவர் வேண்டியபடி சுவர்கள் சுண்ணாம்புபூசி வெள்ளையடித்திருக்க வேண்டும். மேலும் தளம் அழுத்தமான சீமந்தால் பூசியும் சீமந்தால் கட்டி சீமந்துபூசிய கட்டிடமான கானுக்குப்போக நீரோட்டமுள்ள சாய்வாயிருக்க வேண்டும். வியாதிகள்தொற்று மருந்துபோட்டு ஒரு நாளைக் கிரண்டுதரம் கான்கழுவவேண்டும். இரத்தக்கயறு மழுக்குமில்லாமல் கடை மிகவும் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். சுவர்களும் நிலமும் கான்களும் பழுதில்லாதநிலையிலிருக்கவேண்டும்.

2. "கௌன்ரர்" என்று சொல்லப்படும் பட்டடையின் ஒரு பக்கத்தில் மீன் விற்கவேண்டும். மற்றப்பக்கம் மீன் வாங்குபவர்களுக்கு விடல்வேண்டும். கடைக்காரன் கடைக்குள் நிற்கவேண்டும். வெட்டும் பலகை 2 அடி நீளமுள்ளதாக விருத்தல்வேண்டும். சாமான்களெல்லாம் மிகவுஞ் சுத்தமாயிருத்தல் வேண்டும். பாவித்தஉடனே அவைகளைத் தண்ணீராற் கழுவி கடுமையான சுத்தமான பிறசால் துடைக்க வேண்டும். மீன்கள் தூக்குங் கொளுவிகளெல்லாம் மினுக்கப்பட்டுக் கறளில்லாம லிருக்கவேண்டும்.

3. மீன்கள் தூக்கும் கொளுவிகளைத் தாங்குங் கம்புகள் தூங்கும் புரிகளும் மீன் நிறுக்கும் தராசுகளும் லோகத்தால் செய்யப்பட்டதா யிருக்கவேணும்.

4. கழிவுச்சரக்கு வைக்க சங்கத்தலைவர் அங்கீகாரம்பெற்ற பருப்பமுங் உருவமுமுள்ள ஷிங் தகரத்தால் செய்த மூடியுள்ளதும் எடுக்கக்கூடிய பெட்டியை மீன் கடைக்காரன் ஒவ்வொருவரும் வைத்திருத்தல் வேண்டும்.

5. கடையடியிலும் உள்ளுமுள்ள எலலா அழுக்கும் கஞ்சலும் நாளைக் கொருமுறையாகுதல் அகற்றி கான்கள் நல்லாய்க் கழுவியிருக்க வேண்டும்.

6. மீன் பெட்டிகளை ஒவ்வொரு நாளும் கழுவி வெய்யிலிலும் காற்றிலும் விடவேண்டும். சந்தைக்குள்ளே வைக்கப்படாது.

7. மீன் கடைகாரனறிய தொற்று நோயில் வருந்துபவனும் அல்லது கிட்டிய நாட்களுள் வருந்தியவனும் அல்லது வருந்துகிறவனுக்கு சொற்ப நாட்களுக்குட் துணையாயிருந்தவனும் மீன்கடைக்குப் பொறுப்பாய் அல்லது அங்கே வேலைக்கு வைக்கப்படாது.

8. சங்கத்தலைவர் அல்லது அவரிடத்தில் அதிகாரம் பெற்ற வேறொருவர் சோதிக்க ஒவ்வொரு மீன்கடையும் அங்கே நடக்கும் வேலையும் எல்லா நியாயமான நேரங்களிலும் திறந்திருக்க வேண்டும்.

9. இப்பிரமாணங்களெல்லாம் 'பிறேம்' போட்டு கடையில் தெரியக்கூடிய இடத்தில் தூக்கியிருக்க வேண்டும்.

பொதுவான துணைப்பிரமாணங்கள்.

1898 ம் ஆண்டு 13 ம் இலக்க 56 (21) ம் பிரிவின் கீழ்.

1. எதாகிலும் வீட்டின், குடியிருக்குமிடத்தின், கோயிலின், வேலை ஸ்தலத்தின் ஒரு பகுதியாவது முற்றாவது காணக்கூடிய வெளிச்சமும் காற்றுமுள்ளதாய் இருக்கவேண்டும். மேலும் அவைகள் சங்கத்தலைவரின் அல்லது அவரின் அதிகாரத்தின்படி நடக்கும் வேறு உத்தியோகஸ்தரின் கட்டளைப்படி வெளியாவது உள்ளுக்காவது வெள்ளையடித்து தொற்றுநோ யணுகா மருந்தும் போட்டு வேறு விதமாயாவது துப்பரவுபண்ணியிருக்க வேண்டும்.

2. கூலிக்கிருப்பவன் அல்லது குடியிருப்பவன் தான் செய்கிறேனென்று ஏற்றுக்கொண்டானென்று சங்கத்தலைவரின் திருப்திப்படி ஒப்பனைபண்ணினாலொழிய வீட்டை நன்னிலையில் வைத்திருக்கவும் எலிகள் இருக்கக்கூடிய புத்துகள் நிலத்திலும் சுவரிலும் இல்லாமல் இருக்கவும் பார்த்துக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு வீட்டின் அல்லது வேறு கட்டிடத்தின் சொந்தக்காரனின் கடமையாகும்; கூலிக்கிருப்பவன் அல்லது குடியிருப்பவன் மேற்சொல்லிய விதமாய்ச் செய்ய ஒத்துக்கொண்டால் இக்கடமை அவனின் கடமையாகும்.

3. வியாபாரத்துக்குப் பாவிக்கும் எல்லாக் கட்டிடங்களின் நிலங்களும் சீமந்தால் பூசியிருக்கவேண்டும். மற்றுங் கட்டிடங்கள் சங்கத்தலைவர் கருத்துப்போற் செய்யவேண்டும்.

4. வீடாகப் பாவிக்குமிடத்தில் அல்லது வீட்டின் விறுந்தையில் அல்லது வீட்டுடன் தொடுத்துக் கட்டப்பட்டிருக்கும் கொட்டிலிலாவது மடுவத்திலாவது குதிரையாவது, கழுதையாவது, மாடாவது, ஆடாவது, பன்றியாவது அடைக்கப்படாது. வீட்டிலிருந்து 50 யாருக்குள்ளே மேற்சொல்லிய மிருகங்களில் ஒன்றாவது அடைக்கப்படாது.

5. வியாபாரத்துக்குப் பாவிக்கப்படுங் கட்டிடங்களில் அங்கே சேர்த்துவைத்த சாமான்களும் பொருள்களும் அவ்வீடுகளின் நல்ல வெளிச்சத்துக்கும் காற்றுக்கும் சுகமாய் சுத்தப்படுத்தற்கும் விலங்கமில்லாமல் வைக்கப்படல் வேண்டும். நிலத்தின் நாலிலொருபங்கு ஒன்றும் வையாமல் வெறுமையாயிருக்கவேண்டும். இறப்பு "சீலிங்" க்கு 4 அடிக்குள் ஒரு சாமானும் அடுக்கப்படாது.

1898 ம் ஆண்டு 13 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 56 (5) ம், (21) ம் பிரிவுகளின் கீழ் நாவலப்பிட்டிச் சௌக்கிய சங்கத்தாரால் செய்யப்பட்டு அதிகார நிருவாக மந்திரச்சபையாரின் புத்திமதியைக்கொண்டு அதியுத்தம தேசாதிபதியவர்கள் அங்கீகரித்த பின்வருந் துணைப்பிரமாணங்கள் சகலரு மறியும்படி பிரசுரஞ்செய்யப்படுகின்றன.

அதியுத்தமனுரது கட்டளைப்படி,

கொழும்பு, இராசாங்க லிகிதர் கந்தோர்,
1922 ம் ஞு தைமீ 10 ந் வ்.

கிறேய்ம் தோம்ஸன்,
இராசாங்க லிகிதர்.

மேற்கூறிய துணைப்பிரமாணங்கள்.

1898 ம் ஆண்டு 13 ம் இலக்கச்சட்டத்தின் 56 (5) ம் பிரிவின்கீழ்.

இறைச்சிக்கடைகள்.

1. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் நல்லாய்க் காற்றும் வெளிச்சமுமுள்ளதாக இருக்கவேண்டும். சங்கத்தலைவர் வேண்டுமாறு அதின் சுவர்கள் சுண்ணும்புபூசி வெள்ளையடித்திருக்கவும், நிலம் சீமந்து பூசியும், கான் கட்டப்பட்டுள்ளதாயும் போக்குவரவு நல்லாயு மிருக்கவேண்டும்.

2. இறைச்சிவைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் மிகவுஞ் சுத்தமாக இருக்கவேண்டும்.

3. இறைச்சிக்கடையில் இருக்கும் ஒவ்வொரு மேசையும் "ஷிங்" தகரத்தால் அல்லது சங்கத்தலைவர் சம்மதப்பட்ட வேறு தண்ணீர் ஊறி இறங்கவிடாத பொருளால் மூடியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட மேசையும், வெட்டும் பலகையும் மற்றுஞ் சாமான்களும் மிகவுஞ் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். பாவித்தவுடன் இவைகளைத் தண்ணீரால் கழுவி கடுமையானவும் சுத்தமான பிறசுஷால் துடைக்கவேண்டும். இறைச்சி தூக்கும் எல்லாக் கொளுவிகளும் மினுக்கப்பட்டு கறளில்லாமல் வைத்திருத்தல் வேண்டும்.

4. கழிவும் விற்கக்கூடாத சரக்குள் பகுதிகளை உடனே அகற்றப்படாவிட்டால் இலையான்கள் போகக்கூடாத துவாரங்களுள்ள ஸின்க்கு மூடியினுல் மூடப்பட்டவும் "ஷிங்" தகரத்தால் உள்வேலை செய்யப்பட்ட ஓர் பெட்டியில் வைத்திருக்க வேண்டும்.

5. இறைச்சிக்கடைக்குக் கிட்டவுள்ள எல்லா அழுக்கும் ஊத்தையும் ஒரு நாளைக்கு ஒரு முறையாகினு மகற்றப்பட வேண்டும். கான்கள் நல்லாய்க் கழுவப்பட்டு மிருக்கவேண்டும்.

6. இறைச்சிக் கடைக்கார னறிய தொற்றுநோயால் வருத்தப்படும் அல்லது முந்திவருத்தப்பட்ட ஆள் அல்லது அப்படி வருத்தப்படுகிறவனுக்கு துணையாயிருந்தவன் அப்படி இறைச்சிககடையில் வேலையாயும் அல்லது கடைக்குட் பொறுப்பாயும் இருக்கப்படாது.

7. கழிவுச் சரக்கு வைக்கிறதற்கு சங்கத்தலைவர் அங்கீகரித்தபடி பருப்பமுள்ளவும், மூடியுள்ளவும், எடுக்கக்கூடியவும் லோகத்தால் அல்லது வேறு பொருளால் செய்யப்பட்ட பெட்டியை வைத்திருக்க வேண்டும்.

8. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் அதன் வியாபாரபடிக்கைளும் எல்லா நியாயமான் நேரங்களிலும் திறந்ததாயும் நடைபெறுகிறதாயு மிருக்கவேண்டும். அது சங்கத்தலைவரால் அல்லது அவர் அதிகாரம்பெற்ற இன்னொருவரால் சோனைக்கு உடன்பாடுள்ளதாக யிருக்க வேண்டும்.

9. அடியும் நாலுபக்கங்களும் "ஷிங்" தகரத்தால் உட்பரவப்பட்டுள்ள ஒரு மூடிய வண்டியில் இறைச்சியை அடிக்கிற வீட்டிலிருந்து விற்குங் கடைக்குக கொண்டுவரவேண்டும். இந்தவண்டில் இறைச்சி கொண்டுபோக மாத்திரம் பாவிக்கப்படல் வேண்டும். அதை மிகவும் துப்பரவாய் வைத்திருத்தல் வேண்டும்.

10. தோல்களை இறைச்சிக் கடைக்குட் சேகரம்பண்ணப்படாது.

11. இறைச்சி விற்றற்கு தேவையான சாமான்க ளொழிய தட்டுமுட்டுச் சாமானுவது அல்லது வேறு சாமானுவது இறைச்சிக் கடைகருள் வைத்திருக்கப்படாது.

12. ஒரு இறைச்சிக்கடையும் குடியிருத்தற்குப் பாவிக்கப்படாது.

13. என்ன நியாயத்தைக்கொண்டாவது இறைச்சிக் கடையிலும் மிருக சாதி எதையும் வைத்திருக்கப்படாது.

14. இறைச்சி தூக்கும் கொளுவிகளைத் தாங்குங் கம்புகள் கட்டப்பட்டுத் தூங்கும் புரியும் இறைச்சி நிறுக்குந் தராசுகளும் லோகத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

15. ஒவ்வொரு இறைச்சிக் கடையிலும் தெரியக்கூடிய இடத்தில் இத்துணைப் பிரமாணங்களை பிறேம்போட்டு தூக்கியிருக்க வேண்டும்.

1898 ம் ஞு 13 ம் இலக்க 56 (5) ம் பிரிவின் கீழ்.

மீன்கடைகள்.

1. ஒவ்வொரு மீன்கடையும் நல்ல வெளிச்சமுள்ளதாயும் காற்று போககுவரவு செய்யக்கூடியதா யிருக்கவேண்டும். சங்கத்தலைவர் வேண்டியபடி சுவர்கள் சுண்ணும்புபூசி வெள்ளை யடித்திருக்க வேண்டும். மேலும் தளம் அழுத்தமான சீமந்தால் பூசியதாயும் சீமந்தால்கட்டி சீமந்துபூசிய கட்டிடமான கானுக்குபோக நீரோட்டமுள்ள சாய்வா யிருக்க வேண்டும். வியாதிகள் தொற்று மருந்துபோட்டு ஒருநாளைக் கிரண்டுதரம் கான் கழுவவேண்டும். இரத்தக்கயறு மழுக்கு மில்லாமல் கடை மிகவும் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். சுவர்களும், நிலமும் கான்களும் பழுதில்லாத நிலையிலிருக்கவேண்டும்.

2. "கெனன்ரெட்" என்று சொல்லப்படும் பட்டடையில் ஒருபக்கத்தில் மீன் விற்கவேண்டும். மற்றப்பக்கம் மீன்வாங்குபவர்களுக்கு விடல்வேண்டும். கடைக்காரன் கடைக்குள்ளே நிற்கவேண்டும். வெட்டும் பலகை 2 அடி நீளமுள்ளதா யிருத்தல் வேண்டும். சாமான்க ளெல்லாம் மிகவுஞ் சுத்தமாயிருத்தல் வேண்டும். பாவித்தஉடனே அவைகளைத் தண்ணீரினுல் கழுவி கடுமையான சுத்தமான பிறசால் துடைக்க வேண்டும். மீன்கள் தூக்குங் கொழுவிகளெல்லாம் மினுக்கப்பட்டு கறளில்லாம லிருக்கவேண்டும்.

3. மீன்கள் தூக்கும் கொழுவிகளைத் தாங்கும் கம்புகள் தூங்கும் புரிகளும் மீன்நிறுக்கும் தராசுகளும் லோகத்தால் செய்திருக்க வேண்டும்.

4. கழிவுசரக்கு வைக்க சங்கத்தலைவர் அங்கீகாரம்பெற்ற பருப்பமும் உருவமுமுள்ள "ஷிங்" தகரத்தால் செய்த மூடியுள்ள எடுக்ககூடிய பெட்டியை ஒவ்வொரு மீன்கடைக்காரனும் வைததிருக்க வேண்டும்.

5. கடையடியிலும் உள்ளுமுள்ள எல்லா அழுக்கும் கஞ்சலும் நாளைக்கு ஒருமுறையாகுதல் அகற்றி கான்கள் நல்லாய்க் கழுவியிருக்க வேண்டும்.

6. மீன்பெட்டிகளை ஒவ்வொரு நாளு கழுவி வெய்யிலிலும் காற்றிலும் விடவேண்டும். சந்தைக்குள்ளே வைக்கப்படாது.

7. மீன்கடைக்காரனறிய தொற்றுநோயில் வருந்துபவனும் அல்லது கிட்டியநாட்களுக்குள் வருந்தியவனும், அல்லது வருந்துகிறவனுக்குத் துணையாயிருப்பவனும் மீன்கடைக்குப் பொறுப்பாய் அல்லது அங்கே வேலைக்கு வைக்கப்படாது.

8. சங்கத்தலைவர் அல்லது அவரிடத்தில் அதிகாரம்பெற்ற வேறொருவர் சோதிக்க ஒவ்வொரு மீன்கடையும் அங்கே நடக்கும் வேலையும் எல்லா நியாயமான நேரங்களிலும் திறந்திருக்க வேண்டும்.

9. இப்பிரமாணங்க ளெல்லாம் பிறேம்போட்டு கடையில் தெரியக்கூடிய இடத்தில் தூக்கியிருக்க வேண்டும்.

1898 ம் ஆண்டு 13 ம் இலக்க 56 (21) ம் பிரிவின் கீழ்.

1. ஏதாகிலும் வீட்டின், குடியிருக்குமிடத்தின், கோயிலின், வேலை ஸ்தலத்தின் ஒரு பகுதியாவது முற்ருவது காணக்கூடிய வெளிச்சமும் காற்றும் உள்ளதாய் இருக்க வேண்டும். மேலும் அவைகள் சங்கத்தலைவரின் அல்லது அவரின் அதிகாரத்தின்படி நடக்கும் வேறு உத்தியோகஸ்தரின் கட்டளைப்படி வெளியிலாவது உள்ளுக்காவது வெள்ளையடித்து தொற்றுநோயணுகா மருந்தும்போட்டு வேறு விதமாயாவது துப்புரவு பண்ணியிருக்க வேண்டும்.

2. கூலிக்கிருப்பவன் அல்லது குடியிருப்பவன் தான் செய்கிறேனென்று ஏற்றுக்கொண்டானென்று சங்கத்தலைவரின் திருப்திப்படி ஒப்பனை பண்ணினலொழிய வீட்டை நன்னிலையில் வைத்திருக்கவும் எலிகள் இருக்கக்கூடிய புத்துகள் நிலத்திலும் சுவரிலும் இல்லாமல் இருக்கவும் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு வீட்டின் அல்லது வேறு கட்டிடத்தின் சொந்தக்காரனின் கடமையாகும்; கூலிக்கிருப்பவன் அல்லது குடியிருப்பவன் மேற்சொல்லிய விதமாய்ச் செய்ய ஒத்துக்கொண்டால் இக்கடமை அவனின் கடமையாகும்.

3. வியாபாரத்துக்குப் பாவிக்கும் எல்லாக் கட்டிடங்களின் நிலங்களும் சீமெந்தால் பூசியிருக்க வேண்டும். மற்றுங் கட்டிடங்கள் சங்கத்தலைவர் கருத்துப்போற் செய்யவேண்டும்.

4. வீடாகப்பாவிக்கு மிடத்தில் அல்லது வீட்டின் விருந்தையில் அல்லது வீட்டுடன் தொடுத்துக் கட்டப்பட்டிருக்கும் கொட்டிலிலாவது மடுவத்திலாவது குதிரையாவது, கழுதையாவது, மாடாவது, ஆடாவது, பன்றியாவது அடைக்கப்படாது. வீட்டிலிருந்து 50 யாருக்குள்ளே மேற்சொல்லிய மிருகங்களில் ஒன்றுவது அடைக்கப்படாது.

5. வியாபாரத்துக்குப் பாவிக்கப்படும் கட்டிடங்களில் அங்கே சேர்த்துவைத்த சாமான்களும், பொருள்களும் அவ்வீடுகளின் நல்ல வெளிச்சத்துக்கும், காற்றுக்கும், சுகமாய் சுத்தப்படுத்தற்கும் விலங்கமில்லாமல் வைக்கப்படல் வேண்டும். நிலத்தின் நாவி லொருபங்கு ஒன்றும் வையாமல் வெறுமையாயிருக்க வேண்டும். இறப்பு "சீலிங்" க்கு 4 அடிக்குள் ஒரு சாமானும் அடுக்கப்படாது.

## அரசாட்சியாரின் தேளவைககாரிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மலகலவில் சுயபாஷை ஆண் பெண் பாடசாலைகள் கட்டுகிற தென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும்காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,712. குறிச்சி—மலகல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ககற்றககவத்த .. | தென்னையும் மற்றும்மரங்களுமுள்ளது .. | பி. கென்டிறிக் .. | 0 | 1 | 14·1 |
| 2 | ஷை .. | 6 தென்னைகள் உள்ளது .. | பி. கென்டிறிகும் மற்றவர்களும் | 0 | 1 | 21·7 |
| 3 | ஷை .. | கிடுகுவீடு உள்ளது .. .. | பி.கென்டிறிக் .. .. | 0 | 1 | 8·6 |
| 4 | ஷை .. | சேனு .. .. | ஷை .. .. | 0 | 1 | 1·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஷு பெப்புருவரிமாசம் 7 ங் தேதியிலன்று 10 மணிக்கு அவ்விடத்தில்தானே என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1922 ம் ஷு ஜனுவரிமீ 6 ௳.

ஈ. பி. அலக்ஸ்சான்டர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு வெளிஇடத்துக்கும் ஒரு ருேட்டுப் போடுகிறதற்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,724. குறிச்சு—நீர்கொழும்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 8 | 11 ம் இலக்கத்தின் பகுதி .. | ஓட்டால்வேய்ந்த கல்வீட்டின் பகுதி .. | முடி .. | 0 | 0 | 0·72 |
| 9 | பெலவத்த .. | ஓட்டால்வேய்ந்த கல்கடையின் பகுதி .. | முடி .. | 0 | 0 | 1·80 |
| 12 | 10 ம் இலக்கத்தின் பகுதி .. | ஷை .. .. | முடி .. | 0 | 0 | 0·39 |
| 15 | 7 ம் இலக்கத்தின் பகுதி .. | ஓட்டால்வேய்ந்த கல்சந்தை, கல்வாய்க்காலின் பகுதி | சி ஸ்திறீற் ருேமன்கத்தோலிக்க கோயில் | 0 | 0 | 20·77 |
| 16 | 29 ம், 30 ம் இலக்கப்பகுதி | இரண்டு ஓட்டு கல்வீடுகளும், கல்கிணறும் கககூசும் உள்ளது | கிருன்ஸ்திறீற் ருேமான் கத்தோலிக்க கோயில் | 0 | 0 | 17·67 |
| 17 | 31–34 ம் இலக்கப் பகுதி .. | ஓட்டுகல்வீட்டின் பகுதியும், ஓட்டால் வேய்ந்த வளியும் | சீ ஸ்திறீற் ருேமான்கத்தோலிக்க கோயில் | 0 | 0 | 2·83 |
| 18 | 12 ம், 35–38 ம் இலக்கப் பகுதி | ஷை .. .. | கிருன்ஸ்திறீற் ருேமான் கத்தோலிக்க கோயில் | 0 | 0 | 3·33 |
| 19 | ஷை .. | ஷை .. .. | ஷை .. | 0 | 0 | 1·50 |
| 20 | 30 ம் ஷை .. | ஷை .. .. | ஷை .. | 0 | 0 | 0·42 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஷு பெப்புருவரி மாதம் 14 ங் தேதியிலன்று 10 மணிக்கு நீர்கொழும்பு ஏர்பன்டிஸ்திறிக் கவுன்சில்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1922 ம் ஷு ஜனுவரிமீ 9 ௳.

ஈ. பி. அலக்ஸ்சான்டர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.